முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1512

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.11.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா
அறம் காத்திடும் தேசிகா
வரம்பல பெற்று என் சக்தியாக
வையகத்தில் வாழுகின்ற குருராஜா
2. அரசனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும் அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 03 ம் நாள், 19.11.2023, ஞாயிற்றுக்கிழமை)
வரம் கூடி அரங்கன் சக்தி பெருகி வருக
தரமானத் தொண்டர்படைகள் எங்கும் பெருகி
தரணியெங்கும் அன்னதானசேவை வளர்ந்து
3. வளர்ந்து உலகம் தர்ம லோகமாகும்
வளர்ச்சி கொண்ட ஞானவான்கள் மூலமாக
சலனமற அரங்கன் அவதார நோக்கம்
சடுதி நிறைவேறும் காலம் கனியும்
4. கனியவே கனிவேலவன் யான்
கருணைகொண்டு அரங்னோடு இருக்க
இனியும் காலம் கடத்தாது
எல்லாவகையும் மாற்றம் தேற்றமும் இனிதே காணும்
5. காணவே அரங்கன் வழி
தொண்டர்கள் கட்டமைப்பாய்
சகல செயல்களிலும் ஞானமோடு கூடிய
தர்மபலம் நிறைந்த ஆற்றலாக
6. ஆற்றலாக இறங்கி அற்புதத்தை
அரங்கனை வேண்டி செய்ய
ஆறுமுகன் யான் சூட்சுமமாக
இருந்து அருள் புரிவேன்

7. அருளவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
ஆற்றல்பட அரங்கன் தரும் தர்மமே உயர்ந்த தர்மம்
வரமென உலகோர் இந்த நோக்கத்தை
நிறைவேற்றி வல்லமைபட அரங்கனோடு இணைந்திருந்தால் போதும்
8. போதுமப்பா உலகுக்கு மாற்றம்
புண்ணிய வழியே காணக்கூடும்
பூதளமெங்கும் தர்ம ஞான ஆட்சி
புகலுவேன் அரங்கனால் அரங்கேறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—